'(கணவனை இழந்த) விதவைக்காகவும் ஏழைக்காகவும் பாடுபடுகிறவர், 'இறைவழியில் அறப்போர் புரிபவரைப் போன்றவராவார்' அல்லது 'இரவில் நின்று வணங்கிப் பகலில் நோன்பு நோற்பவரைப் போன்றவராவார்'

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு
அவர்கள் அறிவிக்கிறார்கள் : '(கணவனை இழந்த) விதவைக்காகவும் ஏழைக்காகவும் பாடுபடுகிறவர், 'இறைவழியில் அறப்போர் புரிபவரைப் போன்றவராவார்' அல்லது 'இரவில் நின்று வணங்கிப் பகலில் நோன்பு நோற்பவரைப் போன்றவராவார்'.
[சரியானது] [இதனை இமாம் புஹாரி, முஸ்லிம் ஆகிய இருவருமாக பதிவு செய்துள்ளனர்]

தனது விவகாரங்களை கவனிப்பதற்கு எவரும் இல்லாத கணவனை இழந்த பெண், மற்றும் தேவையுள்ள ஏழைகளின் நலன்களில் ஈடுபட்டு அல்லாஹ்வின் கூலியை மாத்திரம் எதிர் பார்த்தவராக அவர்களுக்கு செலவு செய்பவருக் குரிய கூலி, இறைபாதையில் போரிடுபவர், தொடர்ச்சியான இராவணக்கத்தின் காரணமாக சோர்வடையாது நின்று வணங்குபவர், தொடர்ந்து நோன்பு நோற்பவர் ஆகியோருக்கு கிடைக்கும் கூலியை ஒத்தது என நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இந்நபிமொழியில் அறிவித்துள்ளார்கள்.

http://www.sunnah.global/hadeeth/ta/show/3135